# மெய்யான காவலாளர் (True Chowkidar)

**மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக்கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக. (எசே 3:17)**



மேற்க்கண்ட வசனத்தில் நாம் காண்கிறபடி தேவனே தேசத்தையும், தம் மக்களையும் பாதுகாக்கும் வகையில் காவலர்களை ஏற்படுத்துகிறார். அப்படி ஏற்படுத்தப்பட்டவரே எசேக்கியேல் தீர்க்கதரிசி ஆவார். இங்கு நாம் கவனிக்க வேண்டிய இரண்டு காரியங்கள், ஒன்று ஒரு காவலாளன் ஆண்டவருடைய வார்த்தையை கேட்டுப்பெற்று கொள்ள வேண்டும், இரண்டாவது அந்த வார்த்தையின் தன்மைக்கு ஏற்ப செயல்பட வேண்டும்.

**ஆதி 2:15** கூறுகிறது ***"தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்"*** என்று. ஆம் ஆண்டவர் மனிதனுக்கு கொடுத்த முதல் வேலை தாம் நேர்த்தியாக உண்டாக்கின ஏதேன் தோட்டத்தை காக்க வேண்டும். **ஆதி 2:16,17** வசனங்களில் ***"தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்"***, அதை எவ்வாறு காக்க வேண்டும் என்பதையும், எதை முக்கியமாக காக்க வேண்டும் என்பதையும் ஆண்டவர் கூறினார். இந்த கட்டளையை ஆதாம், ஏவாள் படைக்க படும் முன்னரே பெற்றுக்கொண்டார்.

இங்கு ஆண்டவர் ஆதாமிற்கு கொடுத்த இந்த ஒரே வேலையை அவர் ஜாக்கிரதையாய் செய்திருப்பாரானால் பாவம் உலகில் பிரவேசித்திருக்க முடியாது. ஆனால் அவரோ அந்த காவலை சரியாக காக்கவில்லை. நாம் **எசே 3:17** இல் பார்த்தபடி தேவ வார்த்தையை கேட்டு அதின்படி மற்றவரை எச்சரித்திருக்க வேண்டும். ஒருவேளை ஆதாம் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை கவனமாக காத்திருப்பாரானால் அல்லது தன் மனைவியிடம் தேவ எச்சரிப்பின் சத்தத்தை தீவிரத்தோடு தெரிவித்திருப்பாரானால், சத்துருவிற்கு இடம் இல்லாமல் போயிருக்கும். அவர் தன் காவலை சரியாக காவாமல் போனதால், அவரோடு சேர்ந்து முழு உலகமும் சாபத்திற்க்குள்ளானது.

ஆம் தேவன் நம்மை பாதுகாக்கிறவர் தான். ஆனால் அதே நேரத்தில் நாமும் விழிப்பாயிருக்க ஆண்டவர் எதிர்பார்க்கிறார். ஆண்டவர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்ற நம்பிக்கையோடு வாழலாம், ஆனால் சோம்பலாய் வாழ, அஜாக்கிரதையாய் வாழ ஆண்டவர் கூறவில்லை. **ஆதி 3:23** கூறுகிறது **"அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்."**, ஆம் அன்று ஏதேன் தோட்டத்திற்கு ஆதாமை அழைத்து கொண்டு வந்தார், ஆனால் இன்றோ அங்கிருந்து அனுப்பிவிட்டார். அன்று பண்படுத்தவும், காக்கவும் வைத்தார், இன்றோ அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த வெளியே அனுப்பி விட்டார். மேலும் **ஆதி 3:18,19** கூறுகிறது **"அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்."**

ஆம் ஓர் உன்னதமான வாழ்வின் சூழ்நிலையில் இருந்து மிகவும் மோசமான நிலைமைக்கு ஆதாமின் நிலை மாற காரணம், காக்கும்படியாய் தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை அவர் செய்ய தவறினார். மேலும் **ஆதி 3:24** கூறுகிறது **"அவர் மனுஷனைத் துரத்திவிட்டு"**, ஆம் கரம் பிடித்து ஏதேனிற்குள் அழைத்து வந்த தேவனே இன்று அவ்விடத்தை விட்டு அவனை துரத்துகிறார். எல்லாம் ஆதாமிற்காக உண்டாக்கப்பட்டது, தேவ மகிமையின் நிறைவோடு, அவரோடு உலாவி வாழும் வாழ்க்கையின் உன்னதமான நிலையில் இருந்து **"புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்." (ஆதி 3:17)** என்ற மோசமான நிலைக்கு அவர் வாழ்க்கை தள்ளப்பட்டது. ஆம், ஏதேனிற்கு வெளியே அவர் பாதுகாக்கவும் எதுவுமில்லை, அவரை பாதுகாக்கவும் எதுவுமில்லை.

இதுவே இன்றைய மனித சமுதாயத்தின் நிலை. இன்றைக்கு முளைத்து, நாளைக்கு அடுப்பிலே போட படுகிற புல்லிற்கு ஒப்பான வாழ்க்கை நிலை. இவை எல்லாவற்றிற்கும் ஒரே காரணம் தன் காவலை அவர் காக்கவில்லை. **ரோ 5:19** கூறுகிறது **"அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்."** ஆம் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, ஆதாமின் மீறுதலினால் பாவிகளாக்கப் பட்ட நம்மை இரட்சிக்க வந்தார். ஆதி ஏதேனில் இருந்த அதே தேவ மகிமையின் பிரசன்னத்தை, புதிய எருசலேமில் அனுபவிக்க நம்மை ஆயத்தப்படுத்துகிறார்.

நல்ல மேய்ப்பரான அவர் **"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது." (யோ 10:27-29)**. ஆம், அவர் நம்மை தம் கரத்தில் பாதுகாப்பாய் வைத்திருக்கிறார். அவர் கையில் இருந்து எதுவும் நம்மை பிரிக்க முடியாதபடி நம்மை பாதுகாக்கிறவராய் இருக்கிறார்.

**"நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும்." (யோ 10:11,12)**, ஆம் அவர் தன் ஜீவனையே விலையாக கொடுத்து நம்மை மீட்டெடுத்திருக்கிறார். எனவே நாம் இனி எதையும் காக்க தேவையில்லை, நம்மை அவருக்குள்ளாய் காத்துகொண்டாலே போதும். அவர் எல்லா தீமையினின்றும் நம்மை காத்து நித்திய ஜீவ கரையில் சேர்பார். ஆம், அவரே நம் மெய்யான காவலாளர், அவரை தவிர வேறொருவரும் இல்லை. ஆமென், அல்லேலூயா.